# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 02 /2025
## வழக்கு சாட்சி :PW1(LW1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முருகையா | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | து. மேட்டுக்குளம் | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 48 |

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 08th day of May 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது து.மேட்டுப்பட்டியில் குடியிருநது வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . கடந்த 17.08.2021 அன்று மதியம் 02.30 மணியளவில் லெக்காணப்பட்டியில் உள்ள எனது டீ கடையில் நானும், எனது தம்பி குமார் என்கிற சிவகுமாரும், எனது சகோதரின் மனைவி செல்வி ஆகியோர் இருந்த போது அங்கு சில நபர்கள் கூட்டமாக வந்த தகராறு செய்தனர். எனது கடையில் இருந்த பொருட்களை அடித்து சேதப்படுத்தினார்கள். எனக்கும், எனது தம்பிக்கும் காயம் ஏற்பட்டது. நாங்கள் சிகிச்சைக்காக கீரனூர் அரசு மருத்துவமனை சென்றோம். போலிசார் என்னிடம் ஒரு தாளில் கையொப்பம் பெற்றனர். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. **புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும அ.ா்ச. ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** .போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது . கடந்த 17.08.2023 அன்று ஆஜர் எதிரிகள் என்னையும், எனது சகோதரனையும் ஆபாச வார்த்தைகள் பேசி, கட்டையை கொண்டு தாக்கி காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து, எனது கடையில் இருந்த பொருட்களை சேதப்படுத்தியதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எ.த.கு.வி</u>**

இல்லை.